1996 ஆகஸ்ட் 7]

40 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள். அதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நான் அறிந்த வரையில் எல்லாக் கல்லூரிகளிலும் கேட்பதாகத் தகவல் இல்லை. சில கல்லூரிகளிலே கேட்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தகுந்த, எழுத்து மூலமான புகார் அரசுக்கு வருமானால் அதைப் பற்றி விசாரிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 108, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்.

108—

வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு ஸ்கேன் வசதி

*323— **திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கு ஸ்கேன் (SCAN) வசதி செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்பொழுது, 56 வட்ட தலைமையிட மருத்துவமனைகளில் 'ஸ்கேன்' கருவி செயல்படுகிறது. மீதமுள்ள 8 வட்டத் தலைமையிட மருத்துவமனைகளுக்கும் 1996 ஆகஸ்ட் மாதத்திற்குள் அதாவது, இந்த மாதத்திற்குள் ஸ்கேன் கருவிகள் வழங்கப்பட்டு பொது மக்களின் சிகிச்சைக்காகப் பயன்படுத்தப்படும்.

திரு. ஏ. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மனித வாழ்வில் மருத்துவத்துறையில் 'ஸ்கேன்' கருவி மிக முக்கியமான கருவி. மருத்துவர்கள் துல்லியமான முடிவிற்கு வருவதற்கு உதவிகரமாக இருக்கக்கூடியது இந்த 'ஸ்கேன்' கருவி. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்ட மருத்துவமனையில் ஒரு 'ஸ்கேன்' கருவியை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த மாத இறுதிக்குள்ளாக தமிழ்நாட்டிலுள்ள 136 வட்ட மருத்துவமனைகளிலும் இந்த 'ஸ்கேன்' கருவி அமைத்துத் தரப்படும். இன்றைக்கேகூட எல்லா மருத்துவமனைகளுக்கும் வழங்கிவிடலாம். ஆனால் இந்த 'ஸ்கேன்' கருவி பொருத்தப்படுகின்ற நேரத்தில், அந்த அறைகள் குளு குளு வசதி செய்யப்படவேண்டும். நல்ல முறையில் அவை அமைக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்தப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள எல்லா வட்ட மருத்துவமனைகளுக்கும் 'ஸ்கேன்' கருவி பொருத்தப்படும். உலக வங்கி உதவியோடு 17 கோடி ரூபாயில் அமைக்கப்படுகின்ற இந்தத் திட்டத்தில், 136 'ஸ்கேன்' கருவிகள் வாங்குவதற்காக முதலிலே பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் திட்டத்தை அமல் செய்வதற்காக டெண்டர் கோரிய நேரத்தில், இடைப்பட்ட ஓராண்டு காலத்தில், விலைவாசிகள் குறைந்து விட்டன. எனவே, இந்த 17 கோடி ரூபாயில் கூடுதலாக 50 'ஸ்கேன்' கருவிகள் வாங்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கருவிகளை, நல்ல தரமுள்ள வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்கு அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 109, திரு. கே. சுந்தர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்.

109--

துணை மின் நிலையம் அமைத்தல்

** 1641—* **திரு. கே. சுந்தர்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாலவாக்கத்தில் புதிய துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,